## கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலய மாணவர்களுக்கு

# வீடுகளில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன

கிளிநொச்சியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாகக் கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயம் பெரும் சேதமடைந்திருந்தது. அதனால் இம் மகாவித்தியாலயத்தை மீண்டும் இயக்க அதிபர் திரு. க. ஜெயராசாவும் பாடசாலை அபிவிருத்தி சங்கமும் எடுத்த முயற்சியின் பயனாக பரவிப் பாஞ்சானில் உள்ள நான்கு வீடுகளில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இங்கு மாணவர்களின் வரவும் அதிகரித்துள்ளது. இதேபோல இம்மாவட்டத்தில் உள்ள ஆனையிறவு முகாமுக்கு அருகில் உள்ள மூன்று பாடசாலைகள் இயங்க முடியாத காரணத்தால் இப் பகுதி மக்கள் இடம் பெயர்ந்துள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் இம் மாணவர்களுக்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. ஆசிரியர்களும் இதேபோல பணிபுரிகின்றனர், இதேவேளை பரந்தன் பகுதிக்கு மீண்டும் மக்கள் வரத் தொடங்கியதையடுத்து பரந்தன் இந்து மகாவித்தியாலயமும் நடைபெறுகின்றது. பரு

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-50

முரசொலி

முரசு 04 ஒலி 248 வியாழன் 18-10-1990 (ஐப்பசி 01) ந.அவ்வல் 28

### காலையில் மயிலிட்டிக் கடற்கரையூடாக வெளியேறியபோது

# பலாலியில் ராணுவம் - புலிகள்

# நேற்று முழுவதும் கடும் மோதல்

## பொம்மர்கள், அவ்ரோ விமானங்கள் பரவலாகக் குண்டு வீச்சு

**பலாலி இராணுவ முகாமிலிருந்து விமானப்படையின் உதவியுடன் நேற்று அதிகாலையில் இராணுவத்தினர் வெளியேற எடுத்த முயற்சி விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலையடுத்து முறியடிக்கப்பட்டது.**

கட்டுவன், மயிலிட்டி, வசாவிளான் வழியாக இராணுவத்தினர் வெளியேற முயன்றபோது ஹெலிக்கப்டர்கள் பொம்மர்கள், அவ்ரோ விமானங்கள் வானத்தாக்குதலில் ஈடுபட்டன.

இதனையடுத்து விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் கடுமையான மோதல்கள் இடம் பெற்றன.

காலையில் மயிலிட்டி கடற்கரைப் பகுதியால் வந்த இராணுவம் தொண்டமானாறு வீதியை அடைந்து உள் பாதைகளூடாக வசாவிளான் வடமூலைப் பகுதிக்கு வந்தது.

இப்பகுதியில் விடுதலைப் புலிகள் வழிமறித்து தாக்கு

—04 ஆம் பக்கம் பார்க்க

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரியும் விமானக் குண்டு வீச்சால் சேதம்

நேற்றுக்காலை தெல்லிப்பழையில் வை- 12 விமானமொன்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பீப்பாய்க்குண்டுத் தாக்குதலினால் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் சேதமேற்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு சில யார் தூரத்திலுள்ள கராஜ் ஒன்றினுள் விழுந்து வெடித்த பீப்பாய்க் குண்டினால் தெல்லிப்பழை வைத்தியசாலையின் சத்திரசிகிச்சைக்கூடம், முதலாம்வாட், இரண்டாம் வாட், கதிர் இயக்கப்பகுதி, சவச்சாலை, அம்புலன்ஸ் கொட்டகை என்பன சேதமடைந்துள்ளன.

இத்தாக்குதலை அடுத்து வைத்தியசாலைக்கு நேற்று நோயாளர்கள் வரவில்லை, ஒருசில ஊழியர்களே கடமையிலிருந்தனர். வைத்தியசாலைப்பகுதி சனநடமாட்டமற்றுக் காணப்பட்டது. (ப- 33 கி)

## குப்பிளான், கட்டுவன் பகுதியில் பல வீடுகளும் சேதமாகின

நேற்றுக்காலை வை. 12 ராட்சத விமானம் காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி கட்டுவன், தையிட்டி, குரும்பசிட்டி, தெல்லிப்பழை பகுதிகளில் குண்டுகளை வீசின.

இதனால் இங்குள்ள பல வீடுகள் கட்டிடங்கள் பலத்த சேதமடைந்தன தெல்லிப்பழையில் குகேந்திரன் என்பவரின்கராஜ்முற்றாகசேதமானதுடன் இங்கு நிறுத்தப்பட்ட இரு கார்கள் பாவிக்க முடியாத நிலையில் உள்ளன.

குப்பிளானில் இடம்பெற்ற விமானத்தாக்குதலால் கற்கரைப் பிள்ளையார் கோயிற் பகுதியில் பத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமாகின.

குப்பிளான் சந்தியில் உள்ள பல கடைகளும், வீடுகளும் தரைமட்டமாக்கப்பட்டன.

இதேபோல கட்டுவன், வசாவிளான் பகுதிகளிலும் பல வீடுகள் சேதமடைந்துள்ளன. (ப14ரு)

## பலாலி ஷெல்லுக்கு ஒருவர் பலி

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்று ஏவப்பட்ட ஆட்லறி ஷெல் வசாவிளான், கட்டுவன், மயிலிட்டி, தையிட்டி போன்ற பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இச்ஷெல் தாக்குதலின் போது ஒருவர் பலத்த காயத்துடன் மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## மரத்தில் இளநீர் பறிக்குமாறு உதவி அரச அதிபருக்குப்பணிப்பு

அக்கரைப்பற்று அலடி வேம்புப்பிரிவு தமிழ் உதவி அரசாங்க அதிபர் படையினரால் மரத்தில் ஏற்றப்பட்டு இளநீர் பறிக்குமாறு பணிக்கப்பட்டாராம்.

தான் உதவி அரசாங்க அதிபர் என்று தம்மை அடையாளம் தெரிவித்தும் படையினர் அவரை விடவில்லை.

தனது உயிருக்குப் பயந்து அவர் இப் பணியை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. 66 ரு

## கிளிநொச்சி யாழ் குடாவில் ஊரடங்கு

கிளிநொச்சி மாவட்டம் மற்றும் யாழ் குடாநாடு பூராகவும் நேற்றுக்காலை 6 மணி முதல் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல்வரை அமுல் செய்யப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (கி)

## மன்னார் - பூநகரி வீதியில் யானைகள் நடமாட்டம்

மன்னார்- பூநகரி வீதியில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதால் மன்னார்- யாழ்ப்பாணம் பயணிகள் பெரும் பீதியடைகின்றனர்.

குறிப்பாகச் சைக்கிள்களில் செல்வோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக இந்த வீதியில் வாகனப் போக்கு

0—4 ஆம் பக்கம் பார்க்க

## அம்பாறையில் தினமும் தமிழர் காணமற் போகின்றனர்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ்க்கிராமங்களில் தேடுதல் என்ற பெயரில் வீடுகளைச் சோதனையிட வரும் படையினரும், முஸ்லிம் ஊர் காவற் படையினரும் ஆண்களை வீட்டிற்கு வெளியேவருமாறுகூறிப்பெண்களைஉள்ளே இருக்க பணிக்கின்றனர்,

ஒரு படைப்பிரிவு ஆண்களை முகாமுக்கு அழைத்துச் செல்ல

—04 ஆம் பக்கம் பார்க்க

## பஸ் கொள்ளை நபருக்கு புலிகள் மரண தண்டனை

கடந்த ஆண்டு மட்டக்களப்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த இ. போ. ச. பஸ்ஸில் இடம்பெற்ற கொள்ளையில் சம்பந்தப்பட்ட இளைஞர் ஒருவருக்கு கடந்த புதன்கிழமை உருத்திரபுரத்தில் வைத்து விடுதலைப்புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

இக் கொள்ளை தொடர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## லொறிகளில் உணவுப்பொருள் கிளிநொச்சிக்கு வந்தன

கிளிநொச்சி மாவட்டத்திற்கானஇலவச உணவுப்பொருட்கள் லொறிகள் மூலமாகக் கடந்த வியாழன் கிளிநொச்சிக்கு வந்தடைந்தன.

40 மெட்றிக்தொன் மாவும் 32 மெட்றிக் தொன் அரிசியும் 16 மெட்றிக் தொன் சீனியும் இவ்வாறு வந்துள்ளன. ப6ரு

## செஞ்சிலுவைப் பிரதிநிதிகள் இரத்ததானம் செய்தனர்

மானிப்பாயில் இயங்கும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு மனித நேயத்துடன் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர் பிரதிநிதிகள் காயப்பட்டவர்களுக்கென இரத்ததானம்செய்துளளனர்.

ந. ஆனந்தசபேசன் ப. சதீஸ்குமார். ந ஞானசதேசன், க. இந்திரன், அ ந. பிரகாஸ், இ. ஜெகதீஸ்வரன் ஆகியோரே வழங்கினர்.

மேலுமொரு தொகுதியினர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## நேற்று அமைதியாக நடைபெற்ற தீபாவளிப் பண்டிகைத் தினம்

தீபாவளிப்பண்டிகை நேற்று குடாநாட்டின் பலபகுதிகளில் அமைதியாகவும் ஆடம்பரமின்றியும் கொண்டாடப்பட்டதாக எமது நிருபர்கள் அறிவிக்கின்றனர்.

சாராயத் தவறணைகள்இல்லாததால் கள்ளுத்தவறணைகளில் கியூவரிசையில் மதுப்பிரியர்கள் காணப்பட்டனர்.

ஒருசிலரைப் புது உடைகளுடன் காணமுடிந்தது. (66ரு)

தீர்வற்ற பேச்சுவார்த்தை அர்த்தமற்றது!

# உரிமை அங்கீகரிக்கப்படும்வரை

# தற்போதைய போராட்டம் தொடரும்



போராட்டம் எங்கள் மீது திணிக்கப்பட்ட தொன்றாகும். போராட்டத்திற்கான காரணங்களை தீர்க்கும்வரை தொடர்ந்து போராடுவோம். போராடுவதினைத் தவிர இப்போது எமக்கு வேறு வழியில்லை.

இவ்வாறு தமிழீழவிடுதலைப்புலிகளின் பேச்சாளர்களில் ஒருவரான திரு. யோகரட்ணம் யோகி வெளிநாட்டுச் செய்தி ஸ்தாபனமொன்றிற்கு சில தினங்களுக்கு முன் வழங்கிய பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

யோகி தனது பேட்டியில் மேலும் கூறியுள்ளதாவது:

தமிழர்களுக்குரிய பிரச்சினையினை ஒற்றை ஆட்சி மூலம் தீர்க்க முடியாது என்பதனை பெரும்பான்மைச் சிங்கள சமூகத்தினர் ஏற்றுக் கொள்ளவேண்டும். எமக்குள்ள சுயநிர்ணய உரிமையினை சிங்கள மக்கள் மறுத்து நிற்கமுடியாது.

எம்மைப் பொறுத்தவரை இராணுவத்துடன் தற்பாது காப்பு யுத்தமே நடத்தி வருகின்றோம். எமது மக்கள் மீது இராணுவத்தின் இனப் படுகொலையினை தடுக்கும் நோக்குடனேயே எப்போதும் தற்பாதுகாப்பு யுத்தத்தினை நடத்தி வருகின்றோம்.

நாம் ஒரு மரபுவழி படை அல்ல. நேரடியாகவும் இராணுவத்தினை தாக்குவோம். தேவைப்படின் மறைந்திருந்தும் தாக்கி பெருமளவு இழப்பினை இராணுவத்திற்கு ஏற்படுத்துவோம்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படும் வரை போராட்டம் தொடரும்.

நாம் பேச்சுக்கு எதிரானவர் அல்ல; நாம் சில நிபந்தனைகளை அரசிற்கு கூறியுள்ளோம். தீர்வற்ற பேச்சுவார்த்தை அர்த்தம் இல்லை, ஒற்றையாட்சி முறை மாற்றப்பட்டு எமது உரிமைகளை அரசு அங்கீகரிக்க வேண்டும்
(11கி)

## உதவி வைத்திய அதிகாரிகள் ஜனவரி முதல் இடமாற்றம்

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் பதிவு உதவி வைத்திய அதிகாரிகளுக்கான இடமாற்றத்தை 1991-ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மாகாண சுகாதார அமைச்சு அமுல் செய்யவுள்ளது.

எனவே முன்னர் இடமாற்றத்திற்கென மாகாண சுகாதார அமைச்சுக்கு விண்ணப்பம் அனுப்பியவர்கள் தமது இடமாற்ற விண்ணப்பத்தின் பிரதியை "கிளைச் செயலாளர்" அரசினர் வைத்திய சாலை, கரவெட்டி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.
71 கி)

## வவுனியாவில் தபால் சேவையை சீராக்க நடவடிக்கை

வவுனியாவில் குறிப்பிட்ட சில பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்கு தபால் விநியோகத்தினை மேற்கொள்ள நடவடிக்கைகளை தபால் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

மதவாச்சியில் தேங்கிகிடந்த ஒரு தொகுதி தபால் பைகள் வவுனியாவிற்கு கொண்டு வரப்பட்டு கச்சேரி உப தபால் நிலையத்தில் தரம் பிரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி உப தபால் நிலையத்தில் ஒப்படைக்கப்படும் தபால்களை கொழும்பிற்கு அனுப்புவதற்கான வேலைகளும் இடம் பெறுகின்றது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தபால் நிலையத்தில் முத்திரை விநியோகம் மட்டுமே இடம் பெறுகின்றது.

ஏனைய கரும பீடங்கள் திறக்கப்படவில்லை.
(11கி)

## யாழ். மாவட்டத்தில் 71பேருக்கு புதிதாக பயிலுநர் ஆசிரிய நியமனம்

யாழ் மாவட்டத்தில் புதிதாக எழுபத்தியொருபேருக்கு பயிலுநர் ஆசிரிய நியமனங்கள் அடுத்த சில தினங்களில் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் போட்டியாளர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகக் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் பயிலுநர் ஆசிரிய நியமன வேலைகள் மிகவும் இரகசியமகா மேற்கொள்ளப் படுவதாகவும், ஏற்கனவே சிலருக்கு திருநெல்வேலி றோமன் கத்தோலிக்கத்தமிழ்க் கலவன் பாடசாலை, முத்துத்தம்பி மகாவித்தியாலயம்,வேலணை மேற்கு மகாவித்தியாலயம், வேலணை நடராசா வித்தியாலயம், கரம்பன் சண்முகநாத வித்தியாலயம் ஆகியவற்றில் பயிலுநர் ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மற்றும் சிலருக்கு அடுத்த சில தினங்களில் நியமனம் வழங்கக்கூடிய வகையில் நியமனக் கடிதங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் எமது நிருபர் அறிவிக்கிறார்.
(ப-17கி)

தொழிலாளர்கள் அதிருப்தி!

## சுருட்டுத் தொழிலாளரின் கூலி இருபது ரூபாவினால் குறைப்பு

சுருட்டுத் தொழிலாளர்களுக்கான கூலி அடிக்கடி குறைக்கப்பட்டு வருவதாக தொழிலாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

1989 ஆம் ஆண்டு முற்பகுதியில் 1000 சுருட்டுக்களுக்கு 150 ரூபா கூலியாக வழங்கப்பட்டது.

ஆனால் 1990 நடுப்பகுதியில் இக்கூலி 140 ரூபாவாகக் குறைக்கப்பட்டு தற்பொழுது 130 ரூபாவாகக் இக்கூலி மேலும் குறைக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு வெகுவாக அதிகரித்துவரும் இவ்வேளை தொழிலாளர்களின் கூலி குறைக்கப்பட்டுவருவது குறித்து கவலை தெரிவிக்கப் படுகின்றது.
(74கி,

## நிவாரண மோசடி; 5 கிராம அலுவலர் பொலிஸாரால் கைது

அகதிகளின் நிவாரணத்திற்கென வழங்கப்பட்ட உணவுப் பொருட்களை தனியார்வியாபாரிகளுக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டின் பேரில் ஐந்து கிராமசேவகர்களை கல்முனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் மீது சம்பந்தப்பட்ட கிராமசேவகர்கள் கைது செய்யப்பட்டதுடன் ஒரு தொகுதி உணவுப் பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.
(11கி)

## தீட்சை வைபவம்

தென்மராட்சி இந்துஇளைஞர் ஒன்றியத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு 21ஆம் திகதி காலை 8.00 மணிக்கு பெரிய மாவடி கந்தசுவாமி கோவிலில் தீட்சை வழங்கும் வைபவம் இடம்பெறவுள்ளது.
(ப-4 கி)

## தீப்பெட்டி விற்பனையில் பலவித மோசடிகள்

யாழ்நகர்ப் பகுதியில் தீப்பெட்டி விற்பனையிலும் மோசடிகள் இடம்பெற்று வருவதாகச் சுட்டிக்காட்டப் படுகின்றது.

சில வியாபாரிகள் தீப்பெட்டிகளை உடைத்து அவற்றினுள் இருக்கும் குச்சிகளில் கணிசமானவற்றை எடுத்துவிட்டு பின்னர் அவற்றின் மேல் சீல் பண்ணிய தாளை மீண்டும் ஒட்டி அத்தீப்பெட்டிகளை விற்பனை செய்கின்றனராம்.

கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள கடையொன்றில் வாங்கப்பட்ட தீப்பெட்டியொன்றினுள் பாவிக்கப்பட்ட குச்சிகள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
(72கி)

## பளை கொத்தணி ஆசிரியர் வேதனம்

பளைப் பகுதி ஆசிரியர்களின் செப்டெம்பர் மாத வேதனம் இம் மாதம் இருபத்திரெண்டாம் திகதி திங்கட்கிழமை பளை மகாவித்தியாலயத்தில் வழங்கப்படவுள்ளதாகத் கொத்தணி அதிபர் அ. பொ. செல்லையா தெரிவித்தார்.

ஆசிரியர்கள் தமது பாடசாலை அதிபர்களைச் சந்தித்து வேதனத்தை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது.
(ப-3 கி)

நாளை ஸ்கந்த சஷ்டி விரத ஆரம்பம்

## ஸ்கந்த சஷ்டி விரதம்

கலியுகவரதன் கந்தப்பெருமானைத் துதித்து அநுஷ்டிக்கும் விரதங்களில் அதி சிறந்தது ஸ்கந்த சஷ்டி விரதம். இவ்வாண்டு இவ்விரதம் நாளை வெள்ளிக்கிழமை 19 ஆந் திகதி ஆரம்பமாகிறது. இன்று நோன்பு நாள்.

சூரன், சிங்கன், தாரகன் முதலிய அசுரர்கள் நெடுங்காலம் தேவர், மனிதர் முதலிய யாவரையும் துன்புறுத்தி அழிவு செய்து லந்தனர். பரமசிவன் இதற்கொரு முடிவு காணும் நோக்கில் தனது சக்தியையே முருகப் பெருமானாகப் பிறப்பித்தார், முருகப் பெருமான் சூரபதுமாதி அசுரர்களுடன் ஆறு நாட்கள் போரிட்டு அவர்களை வென்றார். இப்போர் நிகழ்ந்த காலமாகிய ஐப்பசி மாத வளர்பிறை முதல் ஆறு நாட்களையும் விரத நாட்களாகக் கொண்டு முனிவரும் தேவரும் நோற்று வந்தனர். இந்த விரதமே பூலோக மாந்தர்கள் ஸ்கந்த சஷ்டி என்ற பெயரில் அநுஷ்டிக்கும் விரதம்.

ஐப்பசி மாதத் தீபாவளி அமாவாசையை அடுத்த வளர்பிறைப் பிரதமை முதல் சஷ்டியீறாக உள்ள ஆறு நாட்கள் ஸ்கந்த சஷ்டி விரதம். முருகனுக்குரிய மூன்று விரதங்களில் ஸ்கந்த சஷ்டி மிகச் சிறந்த தொன்றாகும். இவ்விரதம் ஆறு வருடங்கள் அல்லது பன்னிரண்டு வருடங்கள் அநுஷ்டிக்கப்படவேண்டும், விரத நாட்களில் உபவாசம் அல்லது ஒருநேர உணவு என்ற நியதியுடன் ஆறு வருடமும் ஒரேமாதிரியாக இருக்கவேண்டும். கடும் தவமாக இவ்விரதத்தை அநுட்டிக்கும் பக்தர்கள் சஷ்டி ஆறுநாட்களும் முழுப்பட்டினியாகவே உபவாசம் இருப்பர். இவ்விதம் கடும் விரதம் அநுஷ்டிக்க முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் இரவு ஒரு பொழுது பால் பழம் அல்லது பலகாரம் உண்டு. இறுதி நாள் உபவாசம் இருப்பர். அதுவும் முடியாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் பகல் ஒருபொழுது அன்னமும் ஆறாம் நாள் இரவு பால்பழம் அல்லது பலகாரம் உண்டு விரதம் இருப்பர். ஏழாம்நாள் அதிகாலையில் நித்திய கர்மானுஷ்டானங்களை நிறைவேற்றி பாரணை செய்ய வேண்டும். இந்தவிரதம் அரசர்கள், தேவர்கள், முனிவர்கள் பலரால் அநுஷ்டிக்கப்பெற்ற வெகு சிறப்பு வாய்ந்தது.

## ஹெலி வீசிய பிரசுரங்கள் பலாலி முகாமுக்குள் வீழ்ந்தன

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் தையிட்டி, மயிலிட்டி பகுதிகளில் ஹெலியிருந்து துண்டுப் பிரசுரங்கள் வீசப்பட்டன.

எனினும் இத் துண்டுப் பிரசுரங்கள் எவையும் அப்பகுதி மக்களுக்குக் கிடைக்கவில்லை.

இவை அனைத்தும் காற்றினால் அள்ளப்பட்டு சென்று பலாலி இராணுவமுகாம். விமானநிலைப் பகுதிகளிலேயே விழுந்தன. (48 கி)

## தனது இரு பிள்ளைகளை வெட்டிக் கொன்ற தந்தை

தந்தையொருவர் தனது இரு பிள்ளைகளையும் நித்திரையில்வைத்து மண்வெட்டியால் வெட்டிக் கொன்ற சம்பவம் தெற்கில் நடந்துள்ளது.

மாத்தறை மாவட்டம் குங்கமை என்னும் கிராமத்தில் குறிப்பிட்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மகள் நில்மினி (14) மகள் ரோகண (09) இருவருமே கொல்லப்பட்டவர்கள் (11கி)

## பண். கோட்டப் பாடசாலைகளில் 68 நிரந்தர அதிபர் வெற்றிடம்

பண்டத்தரிப்பு உதவிக் கல்விப் பணிப்பாளர் பிரிவிலுள்ள (102) அரசாங்க பாடசாலைகளில் 34 பாடசாலைகளில் மட்டுமே நிரந்தர அதிபர்கள் உள்ளனர்

ஏனைய 68 பாடசாலைகளில் சிரேஷ்ட உதவி ஆசிரியர்களும், உப அதிபர்களும் பதில் அதிபர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

பண்டத்தரிப்பு, வட்டுக் கோட்டைத் தொகுதியில் 16 பாடசாலைகளிலும், காங்கேசன்துறைத் தொகுதியில் 18 பாடசாலைகளிலுமே நிரந்தர அதிபர்கள் உள்ளனர்.
(37 கி)

## காரைநகரில் அகண்டநாம பஜனை

காரைநகர் திருமணற்காடு அருள்மிகு கும்பநாயகி ஸ்ரீமுத்துமாரி அன்னையின் தேவஸ்தானத்தில் நாடுநலம் பெறவேண்டி, நலிவடைந்த மக்களின் நலன் காக்கும் நோக்கில் காரைநகர் திருமணற்காடு அன்னை அகண்ட நாம பஜனை அமைப்பினரால் பௌர்ணமித் திருநாட்கள் தோறும் நடாத்தப்பட்டு வரும் "அகண்ட நாம பஜனை" மூன்றாவது ஆண்டு நினைவுத் திருநாள் நாளை 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.
(12-கி)

## வட்டக்கச்சியில் இளைஞர் கொலை

வட்டக்கச்சியில் இளம் வாலிவர் ஒருவர் வயல் வெளியில் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரவு வயல் காவலுக்குச் சென்ற வே. திருச்செல்வம் என்பவரே கொலை செய்யப் பட்டவராவர்.
(35-கி)


## சிறுவிளம்பரம்

தவறிவிட்டது

வெங்கடாசல சர்மா வரதராஜ சர்மா ஆகிய எனது அடையாள அட்டை. மக்கள் வங்கி சேமிப்பு புத்தகம் மற்றும் 2000 ரூபா ரொக்கப் பணம் என்பன 16-ம்திகதி சாவகச்சேரி சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து முரசொலி அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.
10096

யாழ் மாவட்டத்தில்

# இரண்டாம் தர அதிபர்களாக 93 ஆசிரியர்களுக்கு பதவியுயர்வு

இரண்டாம் தர அதிபர்களாக யாழ். மாவட்டத்தில் 93 ஆசிரியர்கள் பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த 93 பேரினதும் விபரம் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. இவர்கள் பெரும்பாலும்வேலணைக்கோட்டம், பருத்தித்துறை கிழக்கு போன்ற கஷ்டப் பிரதேச பாடசாலைகளிலேயே நியமிக்கப்படவுள்ளனர்.

புதிதாக அதிபர் தரம் இரண்டிற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ள யாழ். மாவட்ட ஆசிரியர்களின் விபரம் வருமாறு -

ஏ. சி. ஜலீல் மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம், எஸ் எம். அஹமது பசீர் வண்ணை ஸ்ரீவைத்திலிங்கம் வித்தியாலயம், ஆர். திலாம் கதீஜா ம. வி, எம். பி. யோகேஸ்வரி இணுவில் சைவ மகாஜனா ம. வி., திருமதி ஆர் குட்டித்தம்பி உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, சௌந்தர நாயகி கந்தையா ஹென்றி அரசர் கல்லூரி இளவாலை, ஆர் கைலைநாதன் சாவகச்சேரி இந்துக்கல்லூரி, ஏ. மகாலிங்கம் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம், சகோ மேரி இனிசியா ஏ. கி. புனித திரேசா மகளிர் கல்லூரி அச்சுவேலி, செல்வி எஸ். கந்தசாமி வதிரி திரு இருதயக் கல்லூரி கரவெட்டி, திருமதி ரி. பாலசிங்கம் கலாநிதி ஏ. தியாகராசா ம. ம. வி. காரைநகர், திருமதி வீ. மாரிமுத்து வேலாயுதம் ம. வி. பருத்தித்துறை, ரி. நடராசலிங்கம் மயிலிட்டி றோ க. த. க. பா. காங்கேசன்துறை, தி. எவ். எஸ். ஆர். ஜி. ஆசீர்வாதம் ஹென்றி அரசர் கல்லூரி இளவாலை, திருமதி எஸ். ஐயக்குமார் சாவகச்சேரி மகளிர் ம. வி, சாவகச்சேரி, வீ. திருநாவுக்கரசு உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.

திருமதி செல்லம்மா பத்மநாதன் கச்சாய் அ. த. க. பா கொடிகாமம், திரு கே. யேரின்பநாயகம் மண்டைதீவு ம. வி, கே. சதாசிவம் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தயாலயம் காரைநகர், ஜே. ஜேசுதாசன் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம், ரி முத்துகுமாரசாமி நாவற்குழி ம. வி. கைதடி, திருமதி அமிர்தயோகம் முத்துகுமாரசாமி பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயம்தெல்லிப்பழை, எஸ் பரராசா சந்திரபுர ஸ்கந்தவரோதயக் கல்லூரி மட்டுவில், வீ. சச்சிதானந்தன் கல்வித் திணைக்களம், ஏ. ஸ்ரீக்குமரன் ஹென்றி அரசர் கல்லூரி இளவாலை.

வீ, சண்முகராஜா, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, எஸ். சுப்பிரமணியம் மீசாலை விக்கினேஸ்வரா ம. வி, வீ. சிற்றம்பலம் யாதகல் புனித யோசேப்பு ம வி, பீ. எம். ஜே அந்தோனி புனித மேரி றோ. க. த. க பா, திருமதி நாகேஸ்வரி பரமலிங்கம் சுந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலம், திருமதி வீ. தெய்வேந்திரம் புனித திரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலி, ஏ பேரம்பலம் இளவாலை மெய்கண்டான் ம. வி, எஸ். துரைராஜா, ஆனைப்பந்தி குருநாதசாமி வித்தியாலயம், எஸ். இராஜசேகரம் சத்திர மௌலீச வித்தியாலயம் மட்டுவில் வடக்கு, எஸ். அன்ரன் யூனியன் கல்லூரி தெல்லிப்பளை.

எஸ். கே. தியாகலிங்கம் உடுத்துறை ம. வி. தாளையடி, சகோ மேரி பஸ்கால் செபஸ்தியாம்பிள்ளை கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் கல்லூரி ஊர்காவற்றுறை, திரு ரி. சிவராசா பிரான்பத்தை கலைமகள் ம.வி., த. மகாசிவம் வசாவிளான் ம. ம. வி. காங்கேசன்துறை, எஸ். தம்பித்துரை ஸ்கந்தவரோதயக்கல்லூரி சுன்னாகம், கே. இரத்தினசிங்கம் தம்பாட்டி அ. த. க. பா, நாரந்தனை, எஸ். பரமபதி நல்லூர் ஆனந்த வித்தியாலயம் அரியாலை மேற்கு. கே. பழனிவேற்பிள்ளை கனகரத்தினம் ம. ம. வி, யாழ், திருமதி பீ அன்னலிங்கம் இந்துக்கல்லூரி யாழ், திரு. எம் சாம்பசிவம், மட்டுவில்கமலாசினிவித்தியாலயம், ரி. அருளானந்தன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, எஸ். தில்லைநாதன் நாவாந்துறை றோ க. வித்தியாலயம், ரி ஜெயராசா அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த பாடசாலை வட்டுக்கோட்டை, திருமதி எஸ். துரைராசா இராமநாதன் கல்லூரி சுன்னாகம், என். சிவகுமாரன் கோப்பாய் ம. வி., திருமதி எஸ். நவரத்தினம் விக்கினேஸ்வரா வித்தியாலயம் கைதடி, எஸ். சிதம்பரநாதன் தும்பளை சைவப்பிரகாச ம. வி. பருத்தித்துறை, எஸ். கந்தசாமி மேலைப் புலோலி சைவப்பிரகாச வித். பருத்தித்துறை, கே. வீரசிங்கம் சாவகச்சேரி மகளிர் ம. வி.

எஸ். தங்கவேல் இடைக்காடு ம. வி. அச்சுவேலி, ஆர். துரைநாயகம் கனகரத்தினம் ம. ம. வி. யாழ், கே. கதிர்காமசேகர் மத்துவில் ஸ்ரீ பாரதி வித். கொடிகாமம், திருமதி என். சிவராசா மல்லாகம் ம. வி, ரி. எவ். மனோகரன் கரணவாய் ம. வி- கரவெட்டி, ஐ. வரதராசா எழுதுமட்டுவாள் கணேச வித், எஸ. மகாலிங்கம் மகாஜனாக் கல்லூரி தெல்லிப்பழை, வீ. சச்சிதானந்தன் யூனியன் கல்லூரி தெல்லிப்பழை, எஸ். அருள்சுப்பிரமணியம் மாதகல் புனித யோசேப்பு ம. வி., சகோ. எம். நு. பெமியா, புனித ஜேம்ஸ் மகளிர் கல்லூரி யாழ், பீ. ஜே. அந்தோனி மத்திய கல்லூரி, பீ நடராசா கனகரத்தினம் ம. வி., ரி. கருணாகரன் சொக்குவில் இந்துக்கல்லூரி, பி. மகாலிங்கம் மானிப்பாய் மெமோறியல் ஆ. பா., எம். சண்முகசுந்தரம் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, வீ. கந்தசாமி வரணி வடக்கு. அ, த, க. பா. வரணி, ஏ. எஸ். நடராசா வயாவிளான் ம ம. வி. வசாவிளான்.

எம். வேலாயுதம் அச்செழு சைவப்பிரகாச வித் நீர்வேலி, திருமதி ஜே. பொன்னம்பலம் வேம்படி பெண்கள் உயர் பா., எஸ் செல்வநாயகம் தந்தை செல்வா தொடக்கப் பள்ளி தெல்லிப்பழை, திருமதி கோமளம் அம்பலவாணர் வட்டு இந்துக்கல்லூரி சித்தங்கேணி, எஸ். நடராசா எழுதுமட்டுவாள், சி. சி. ரி, எம். எஸ். பா., ஐ. சின்னையா கச்சாய் அ. த. க. பா. கொடிகாமம், செல்வி பாக்கியலட்சுமி மார்க்கண்டு கோண்டாவில் இந்து ம. வி., எஸ். ஜெகதீஸ்வரநாதன் வேலணை சைவ பிரகாச வித். எஸ். குணவீரசிங்கி வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம் வட்டுக்கோட்டை, திருமதி பீ. சின்னையா கொக்குவில் இந்துக்கல்லூரி, பி. எம். எட்வேட் சில்லாலை றோ. க. த. க. பா. பண்டத்தரிப்பு, ஐ துரைராசா வண்ணை நாவலர் ம. வி.

ஏ. ஸ்ரீகாந்தன் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம், திருமதி எஸ். இந்திரராசா வட-இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை, ரி. நாகராசா செங்குந்தா இந்துக்கல்லூரி திருநெல்வேலி கிழக்கு யாழ், ரி. பஞ்சலிங்கம் நல்லூர் தெற்கு விக்கினேஸ்வரா வித், யாழ், எம். நல்லதம்பி பரமசிவம் யாழ். நகரக்கல்லூரி காரைநகர், செல்வி அன்னலக்ஸ்மி கந்தையா இந்து

— 04 ஆம் பக்கம் பார்க்க

மண்டல் கொமிஷன்:- (16. 10. 90 இன் தொடர்ச்சி)

# அடிப்படைச் சமூக ஜனநாயகத்துக்கான உளப்பூர்வமான அரச முயற்சியா? அல்லது அதிகாரச் சதுரங்கத்தின் 'வெட்டு' விளையாட்டுக்களில் ஒன்றா?

## எல்லோரும் சமம்?

நீதிபரிபாலனத்தில், அரசவழங்கிடுகளைப் பெறுவதில் சகலரும் சமம் என்ற கொள்கை இந்த நியமத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஆனால் அதை நடைமுறைப்படுத்த முடியாது போயிற்று.

சாதியமைப்பினை அச்சாணியாகக் கொண்ட இந்தியச் சமூக அமைப்பு இந்தச் சட்டத்தின் ஆட்சி ஏற்படுத்தும் தனிமனித அசைவியக்கத்தை (Individual Mobility) ஏற்றுக் கொள்வது சிரமமே.

## குடும்ப முன்னேற்றம்

பிரித்தானிய ஆட்சி வழிவந்த நவீனமயப் பலமும் சனநாயகமயப்பலமும் வளர வளர அவை வழியாகப் பல ''நன்மைகள்'' பாய்ந்தோடத் தொடங்கின. அரசாங்க உத்தியோகங்கள் (மாதச் சம்பளம்), அந்த உத்தியோகம் தரும் சமூக அதிகாரம் என்பனவும் நவீன வர்த்தகத்துறை அபிவிருத்தி ஆதியனவும் பல குடும்பங்களின் முன்னர் காணப்படாத முன்னேற்றங்களுக்குக் காலாகின.

## சமூகக் கட்டுப்பாடுகள்

ஆனால், இந்தியச் சமூக அமைப்புப் பேணப்பட்ட இடங்களில் முக்கியமாகக் கிராமங்களில், இந்தப் புதிய நன்மைகளைச் சகல மக்கள் குழுக்களும், சமமாகப் பெறுவதைத் தடுக்கும் சமூகக் கட்டுப்பாட்டு முறைமைகள் நிலவின. படிப்பு எல்லோருக்கும் உரியது தான். ஆனால் தாழ்த்தப்பட்டவர்களுக்குப் பாடசாலை இருக்காது அல்லது அவர்கள் பல்வேறு நியாயங்களால் ''பெரிய'' பள்ளிக்கூடங்களிற் படிக்க முடியாது.

## முன்னேற்றங்கள் எல்லோருக்கும் சமமாகச் செல்லவில்லை

இதனால், பிரித்தானிய ஆட்சி வழிவந்த முன்னேற்றங்கள் யாவும் ஒவ்வொரு சாதிக் குழுமங்களுக்கும் சமமாகச் செல்லவில்லை, பிரித்தானியர் வருகைக்கு முன்னர் எந்தெந்தக் 'குழுவினர் வாயாடி கையாடிகளாக' இருந்தார்களோ அவர்களே இந்தப் புதிய நன்மைகளையும் பெற்றனர். வேறு சில வழிகளாலும் சிலசில உடைசல்கள் ஏற்பட்டன. (கிறிஸ்தவ மதமாற்றம்) ஆனால் பொதுவில் சிலர் முன்னணியில் நிற்கின்றவர்களாகவும், சிலர் பின் தங்கியவர்களாகவும் காணப்பட்டனர்.

இந்திய நிர்வாகம் படிப்படியாக சனநாயகப் பாங்கினதாக மாறமாற இந்தப் பிரச்சினை வலுக்கத் தொடங்கிற்று. இதனால்

எமது அரசியல் விமர்சகர்

**க. மா. இராசையா**

இந்தச் செல்வாக்குள்ள 'வாயாடி கையாடிச்' சாதிகளினால் ''ஒதுக்கப்பட்ட'' ''பின் தள்ளப்பட்ட'' சாதியினர் தங்களுக்கு உரிய இடம் தரவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்கத் தொடங்கினர்.

## பிராமண எதிர்ப்பு இயக்கம்

இப்படித் தொடங்கியது தான் பிராமணர் அல்லாதார் இயக்கம் இந்தக் கோஷம் சென்னை மாகாணத்திலும், பம்பாய் மாகாணத்திலும் மேற்கிளம்பின. பிரித்தானிய ஆட்சி வழங்கும் ''அபிவிருத்திகள்'' சாதியமைப்பின் உயர்மட்டத்திலுள்ள பிராமணர்களால் சுவீகரித்துக் கொள்ளப்பட்டனவே தவிர மற்றச் சாதிகளுக்குக் கிடைக்கவில்லை என்றும் கிடைக்க விடாது தடுக்கப்படுகின்றதென்றும் எடுத்துக் கூறும் கோஷத்தை முன்வைத்தே பிராமணர் அல்லாதார் குழுமங்கள் முன்வந்தன. அன்றையசென்னை மாகாணத்தின் அமைப்புக் காரணமாக இந்தக் கோஷத்தை முன்வைத்தவர்கள் தெலுங்கு நாயுடுக்கள், ரெட்டிமார் கன்னட கம்மர், கப்புக்கள், தமிழ் வேளாளர் முதலியார் மார், மலையாளத்து நாயர் முதலியோரே.

## அடிநிலை மக்களுக்குச் சம அந்தஸ்து இல்லை

சென்னையில் இந்தப் பிராமண மேலாண்மையை எதிர்த்த இந்தப் பிரதான சாதிகள் தங்கட்குக் கீழ் வந்த சாதியினருக்குத் தாங்கள் எந்தவித சம அந்தஸ்தும் வழங்கவில்லை. பறையர் மஹாஜனசபை போன்ற ஸ்தாபனங்கள் அந்த அடிநிலை மக்களுக்காகக் குரல் கொடுத்தனர். பம்பாய் மாநிலத்தில் ''மஹர்'' சாதியினரும் இவ்வாறு முறையிட்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிகளிலும், இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களிலும் இத்தகைய சாதிச் சங்கங்கள் படிப்படியாக வளரத் தொடங்கி இவை ஒவ்வொன்றும் தத்தம் முன்னேற்றத்துரிய வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டுமென்று கோரினர்.

## சுதந்திரப்போரும் தீண்டாமை ஒழிப்பும்

சமூக அசைவியக்கம் பற்றிய நிலைமை இவ்வாறிருக்க, மறுபுறத்தில் இந்திய சுதந்திரப் போராட்டம் வளர்ந்து சென்ற நெறிமுறையில் இத்தகையதொரு பிளவுபாடு அரசியல் ரீதியாக ஏற்படுத்தப்படுவது முழு இந்திய சுதந்திரப்போராட்டத்தையும் பாதிக்குமென்று உணரப்பட்டது.

இதனால் 1920 களிலிருந்து அரசியல் முதன்மையைப் பெற்றுக்கொண்ட மகாத்மா காந்தி, தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர் என்ற அடிப்படையில் இந்திய மக்கள் பிரிக்கப்படுவதை எதிர்த்து அந்த மக்களின் நலன் காரணமாக அரசு தொழிற்படுவதிலும் பார்க்க இந்திய மக்களே தொழிற்படவேண்டுமென்று கூறி, தாழ்த்தப்பட்ட மக்கள் கடவுளின் மக்கள் (ஹரிஜின் ஜனங்கள்) என்ற கருத்துப்படும் ''ஹரிஜனம்'' என்ற கோட்பாட்டை முன்வைத்தார். முன்வைத்துத் தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.

## சாதி அழியவில்லை

ஆனால் காந்திஜீயின் இந்த இயக்கத்தினால் சாதிப் பாகுபாட்டு நடவடிக்கைகளையோ, சாதி அடக்கு முறைகளையோ அழித்துவிட முடியவில்லை. காந்திஜீயின் வழி நின்று வந்த ஈ. வே. ராமசாமி நாயக்கர், அம்பேத்கார், போன்றோர், காந்தியிடமிருந்து இதன் காரணமாக பிரிந்து தொழிற்படத் தொடங்கினர். ஈ.வே.ரா, அம்பேத்கார் மூலமாக இந்த நடைமுறை தெற்கிலும், வடக்கிலும் நிலவியது என்பதை அறிந்து கொள்ளலாம்.

## சாதி அடிப்படையில் சனத்தொகையை வகுக்கும் மரபு:

அரசியல் ரீதியாக நிலையிதுவாக நிர்வாக நிலையில் இந்தச் சமவீனம் (சமனற்ற தன்மை) பல பிரச்சினைகளைக் கிளப்பிற்று.

இதன் காரணமாக நிர்வாக ரீதியில் இந்திய சனத்தொகையினரைப் பின்வரும் முறைமையில் வகுத்துக்கொள்ளும் ஒரு நிர்வாக மரபு வளரலாயிற்று.

(i) பின்தங்கிய சாதியினர்.
(Backward Castes)

(ii) அட்டவணைப்படுத்தப்பெற்ற சாதிகளும் குலக்குழுக்களும்
(Scheduled Castes and Tribes)
இவர்கள் (i) இல் குறிப்பிடப்பட்டவர்களிலும் பார்க்கப் பின்தங்கியவர்கள்

(iii) அட்டவணைப்படுத்தப் பெற்ற குலக்குழுக்கள் (Scheduled Tribes) இவர்கள் ஆகப் பின்தங்கியவர்கள், ஆதிவாசிக் கூட்டத்தினர் இதற்குள் வருவர்.

இந்த மூன்றிற்குள்ளும் வராத கல்வி வாய்ப்புள்ளவர்களை முன்னிலைச் சாதியினர்(Forward Castes) என்று குறிப்பிடும் வழக்கு இருந்தது.

## ஜனநாயகத்துக்குக் களங்கம்

இந்திய சுதந்திரத்தின் பின்னர் குறிப்பாக நேருவின் ஆதர்ச வாதத்துக்கு இந்தச் சமனற்ற வளர்ச்சி இந்திய ஜனநாயகத்துக்கான ஒரு மறுவாகவே கருதப்பட்டது. பின்தங்கிவர்களை மேனிலைப்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகள் அரச நிலையில் எடுக்கப்பட்டன. அத்தகைய முயற்சிகள் பெரும்பாலும் அந்த அந்த மாநில மட்டத்திலேயே எடுக்கப் பெற்று வந்தன. எனினும் மத்திய அரசு இந்தச் ஜனநாயக முரண் நிலையை எவ்வாறு படிப்படியாக அகற்றலாமென்று சிந்தித்துக் கொண்டேயிருந்தது. அந்தச் சிந்தனைகளின் பிரதிபலிப்பாக பின்தங்கிய வர்க்கத்தினர் பற்றிய ஆணைக்குழு Backward Class Commission) ஒன்று 1955இல் தொழிற்பட்டது.

## அபிவிருத்திப் பிரச்சினை

காலஞ் செல்லச் செல்ல இந்தப் பிரச்சினை வெறுமனே அரசாங்க உத்தியோக, தொழிற்கல்வி போன்றவற்றுக்கான ஒதுக்கீட்டுப் பிரச்சினையாக மாத்திரமல்லாது இந்திய நாட்டின் அபிவிருத்திப் பிரச்சினையாகவும் உருவெடுத்தது.

(வளரும்

# உலக அரங்கில்

## கொர்பச்சேவ்- சென்னி பேச்சு

ரஷ்யாவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்கப் பாதுகாப் புத்துறையமைச்சர் டிச்சென்னி நேற்று ரஷ்ய ஜனாதிபதி கொர்பச்சேவ்வுடன் வல்லரசுக்களுக்கிடையிலான ஆயுதக் குறைப்புப்பற்றிய பேச்சுவார்த்தைகளை நடாத்தினார், பேச்சுகளின் போது வளைகுடா நிலை குறித்தும் விவாதிக்கப் பட்டது.

## முடிசூட்டு விழாவிற்குப் பாதுகாப்பு

ஜப்பானின் அடுத்த சக்கரவர்த்தியாக தற்போதைய இளவரசர் அக்கிஹிட்டோ அடுத்த மாதம் 12-ம் திகதி முடிசூட்டவுள்ளதையடுத்து நாடெங்கும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் உஷார் படுத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டு விமான சேவைகளும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. முடிசூட்டு விழாவில் கலந்து கொள்ள முப்பது வெளிநாட்டுப்பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். முடியாட்சிக்கு எதிரான செம்படை இச்சமயத்தில் தாக்குதலை நடாத்தலாம் எனவும் அஞ்சப் படுகிறது.

## ராணுவ ரயில் மீது தாக்குதல்

இந்திய பஞ்சாப் மாநிலத்தில் பெரஸ்பூர் என்ற இடத்தில் ராணுவ ரயில் வண்டி மீது சீக்கியத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5 இந்திய ஜவான்கள் கொல்லப்பட்டனர். 16 பேர் காயமடைந்தனர். தாக்குதலில் ரயில் வண்டியும் திக்கிரையானது. கொல்லப்பட்ட ஜவான்களின் தொகை மேலும் அதிகமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுறது.

## பௌதிக நோபல் பரிசு

இவ்வாண்டுக்கான பௌதிகத்திற்கான நோபல் பரிசை இரு அமெரிக்க விஞ்ஞானிகளும் ஒரு கனேடியரும் இணைந்து பெற்றுள்ளனர். ஜெரோஸ் ஹீஸ்மன், ஹென்றி கில்பேக் ஆகிய இரு அமெரிக்கரும் ரிச்சேர்ட் டெய்லர் என்ற கனேடியருமே பௌதிக நோபல் பரிசைப் பெறுகின்றனர். (து)

# யாழ் மாவட்ட அரச செலவுக்கு 468 மில்லியன் ரூபா தேவை

இவ்வாண்டு ஜூன் மாதம் ஆரம்பமான ராணுவ நடவடிக்கையினைப் பயன்படுத்தி யாழ் மாவட்டத்தில் அரசாங்க செலவினத்துக்காக அனுப்பப்பட வேண்டிய 468 மில்லியன் ரூபா இங்கு வந்து சேரவில்லை.

இந்தப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட தொகுதியே கப்பல் மூலமாக அனுப்பப்பட்டு வருகிறது.

இதனால் அரசாங்கக் கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்கும், ஏனைய அரச நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் ஊதியம் சீராகக் கொடுக்கப்பட முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதி இவ்வாறு அனுப்பப்படாவிடில்இங்குஅரச நிறுவனங்கள் செயலிழக்க வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப11ரு)

## உப்பு விளைச்சல் அதிகரிப்பு

இம் முறை மட்டுவில் வண்ணாத்திப்பாலத் தரவைக் கடற் பகுதியில் கூடுதலான உப்பு விளைந்துள்ளது.

இவ் உப்பை புத்தூர், ஆவரங்கால், வாதரவத்தை, சிறுப்பிட்டி, நீர்வேலிப் பகுதி மக்கள் கூடுதலாக தினசரி அள்ளிச் செல்கின்றனர். (கி)

## மருத்துவபீட மாணவருக்கு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வளவினுள் மேற்கொள்ளப்படும் துப்புரவு பணிகளுக்கு உதவு முகமாக யாழ் பல்கலைக்கழக மருத்துவப் பீட மாணவர்களை நாளை சமுகமளிக்குமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ப-11து)

## வவுனியா பூந்தோட்டம் சந்தையில் டீசல் தாராளமாக விற்பனை

வவுனியா தடைமுகாமில் டீசல் கொண்டுபோகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆனால் வவுனியா நகரிலிருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள பூந்தோட்டம் சந்தையில் தேவையான அளவு டீசல் பெறக்கூடியதாய் உள்ளது.

தடைமுகாம்களில் படையினர் கடுமையாக இருந்த போதிலும் போக வேண்டிய பொருள்கள் போய்த்தான் உள்ளது குறிப்பிடத்தக்கது. (11 கி)

## கொம்படிப் பாதையில் வாகனங்கள் செல்ல முடியாது

அண்மையில் பெய்த மழை காரணமாக இயக்கச்சிக்கும்—கண்டாவளைக்கும் இடைப்பட்ட கொம்படிவெட்டைப் பாதையால் வாகனங்கள் எதுவும் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன் சென்ற லொறி, மினிபஸ்கள் கொம்படிவெட்டைப் பாதையில் சேற்றில்புதைந்த நிலையிலுள்ளன. உழவு இயந்திரங்கள் மூலமும் வாகனங்களை எடுக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து இரண்டொரு தினங்கள் மழை பெய்தால் வாகனங்களை அப்படியே சேற்றில் விட வேண்டிய நிலை ஏற்படலாம்.

சைக்கிளில் செல்லும் பொதுமக்கள் வியாபாரிகள் போக்கறப்பு — ஊரியான் பாதை வழியாக வெகு சிரமத்தின் மத்தியில் கடந்த மூன்று தினங்களாகப் பிரயாணத்தை மேற்கொள்ளுகின்றனர். (18-கி)

## காரைநகரில் கடற்படை தாக்குதல்

வயலில் வேலை செய்யச் சென்றவர்களை நோக்கி காரைநகர் கடற்படை முகாமில் இருந்து துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன்தினம் காலை இச் சூட்டுச் சம்பவம் நிகழ்ந்தது.

இதன் காரணமாகபலகாடு, களபூமியைச் சேர்ந்த கமக்காரர் தமது காலபோக நெற் செய்கையை மேற்கொள்ள அச்சம் தெரிவித்துள்ளனர். (ப-31கி)

## மன்னாரில் அரச விடுதிகள் உடைக்கப்பட்டுக் கொள்ளை

அரசாங்க உத்தியோகத்தர்களின் விடுதிகள் உடைக்கப்பட்டு பெறுமதிவாய்ந்த பொருட்கள் பல திருடரால் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவங்கள் மன்னார் மாவட்டத்தில் அண்மையில் இடம் பெற்றுள்ளன.

மன்னார் கட்டிடத் திணைக்களத்தின் பொறியியலாளர் விடுதி உடைக்கப்பட்டதில் இங்கு தங்கியிருந்த பொறியியலாளர் திரு.தயானந்தன், தொழில் நுட்பவியலாளர் திரு. இருதயநாதன், மன்னார் செயலகத்தைச் சேர்ந்த லிகிதர் ஏ. எஸ். கௌரீஸ்வரன், திரு. தனபாலசுந்தரம் ஆகியோர்களது பெறுமதி வாய்ந்த பல பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. (66து)

## திண்டுக்கல்லில் குண்டு வெடிப்பு; பெண்கள் உட்பட 19 பேர் பலி

தமிழகம் திண்டுக்கல்லில் கடை ஒன்றில் நேற்று முன் தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 19 பேர் கொல்லப்பட்டனர். இறந்தவர்களில் 12 பேர் பெண்கள், மூவர் குழந்தைகள்.

தீபாவளிக் கொண்டாட்டத்திற்காகப் பொருட்கள் வாங்க வந்திருந்தவர்களே இந்தக் குண்டு வெடிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக் குண்டு வெடிப்பிற்கான காரணமெதுவும் உடன் தெரியவில்லை. இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது. (கி)

## வங்கிகளுக்குத் தேவையான பணத்தைத் தருவிக்க நடவடிக்கை

யாழ் மாவட்ட வங்கிகளுக்கும் யாழ் செயலகத்திற்கும் தேவையான பணத்தைக் கொழும்பில் இருந்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது.

யாழ் செயலகத்தில் நடைபெற்ற உயர் அதிகாரிகள் கூட்டத்தில் இதுபற்றி ஆலோசிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டதாக யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் தெரிவித்தார்.

மேலும் யாழ் மாவட்டத்திலுள்ள தனியார் மருந்துக்கடைகளுக்குத்(பார்மஸி) தேவைப்படும் மருந்துகளின் அளவுகளையும் தனக்கு அறியத்தந்தால் அதனையும் பெற்றுக் கொள்ள தான் முயற்சி செய்வதாகவும் அரச அதிபர் தெரிவித்தார். (66ரு)

## கைதடியில் ஹெலி சூடு

நேற்று கைதடி,நாவற்குழி, கோப்பாய் போன்ற இடங்களிலும் ஹெலிகப்டர் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

இத்தாக்குதல்கள் வீதி வழியே சென்றுகொண்டிருந்த வாகனங்கள் மீதே நடாத்தப்பட்டன. (71 ரு)

## கைதடியில் வயோதிபர் தாக்கப்பட்டார்

கைதடி முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர் ஒருவர் அங்கு கடமையாற்றும் ஊழியரினால் தாக்கப்பட்டுள்ள சம்பவம் நேற்று முன்தினம் காலை 8. 30 மணியளவில் இடம்பெற்றது. (71 ரு)

## வாகனம் இல்லை உயிர் பிரிந்தது

வாகன வசதி இல்லாததால் ஏழு வயதுச் சிறுவன் அநியாயமாக உயிரிழந்த சம்பவம் கிளாலி றோமன்கத்தோலிக்க பாடசாலை அகதி முகாமில் இடம் பெற்றது.

இச் சிறுவனுக்கு மூளைக் காய்ச்சல் ஏற்பட்டுக்கிளாலியிலிருந்து கொண்டு செல்வதற்கு வாகன வசதியில்லாததால் சைக்கிளில் சாவகச்சேரிக்கு கொண்டு செல்லும் வழியில் உயிர் பிரிந்ததாகவும், பின்னர் அதே சைக்கிளில் சடலத்தைக் கொண்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ப-3கி)

## அரியாலையில் ஹெலி சூடு

அரியாலையில் தபால் பெட்டிச் சந்தியில் நேற்றுப் பகல் ஹெலிகப்டரில் இருந்து சரமாரியான தாக்குதல் நடாத்தப்பட்டது, பத்துக்கு மேற்பட்ட வீடுகள் சேதமாகின.

## கோழி மருந்தும் இங்கு இல்லை

கோழிகளுக்கான மருந்து வகைகளுக்கு குடாநாடு முழுவதும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

விற்றமின் "பீ" குளிசை, கூபென் (பூச்சி மருந்து), ரெறாமைசின், லேயர் பிறிமிக்ஸ் என்பன கிடையாததனால் கோழி வளர்ப்பவர்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்,

கோழித் தீன் கிடையாமையினாலும் பலர் கோழிகளை குறைந்த விலையில் தற்சமயம் விற்றுவருவதை அவதானிக்க முடிகிறது (ப-1 கி)

## சினைப்பரினால் குடும்பஸ்தர் காயம்

காங்கேசன்துறை இராணுவ முகாமில் இருந்து நேற்றுக் காலை மேற்கொள்ளப்பட்ட சினைப்பர் தாக்குதலினால் க. சின்னராசா (38) என்ற குடும்பஸ்தர் காயமடைந்தார். (ப33கி)

## விசர்நாய்தடுப்பூசி வருகிறது

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு வருகின்ற குமணா என்ற கப்பலில் யாழ் போதனாவைத்தியசாலைக்கு ஒருவாரத்திற்குப் போதுமான எ. ஆர். வி. விசர்நாய் கடி ஊசி மருந்தும் 50 பரல் டீசலும் கொண்டுவரப்படவுள்ளன. ப11 ரு

### பலாலி...

பட்டுச் சத்திர சிகிச்சையின் பின் மரணமானார் புங்கன் குளத்தைச் சேர்ந்த இம்மானுவேல் கொன்சன்ரைன்(28), தங்கராசா(27), சிவசாந்தன் ஆகியோர் படுகாயமடைந்து மானிப்பாய் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

திருமதி ஞானலிங்கம், செ. தேவி ஆகியோரும் காயமடைந்து தெல்லிப்பழை வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டது. ப11 33ரு

### பலாலியில்...

தல்களை தொடுத்தனர். நண்பகல் வரை மோதல்கள் இடம் பெற்றன. பின் இராணுவம் முகாமுக்குப் பின் வாங்கிச் சென்றது.

இதனையடுத்து விமானத் தாக்குதல்கள் தீவிரமடைந்தது இதனால் பல வீடுகள் கட்டிடங்கள் சேதமடைந்தன

விமானத் தாக்குதலையடுத்து இப்பகுதி மக்கள் வெளியேறத் தொடங்கினர். ப10-14ரு

### அம்பாறையில்...

மற்றப்பிரிவு வீட்டில் உள்ள பெண்கள் மீது தமது கைவரிசையைக் காண்பிக்கின்றனர்

இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களில் பலர் சடலமாகக் திருக்கோயிற் பகுதியில் கடலில் மிதக்கின்றனர்.

ஆண்களின் சடலங்களும் இருவர் மூவராக கால்கள் பிணைக்கப்பட்டு தலையற்ற முண்டங்களாக கடலில் மிதப்பதை அடிக்கடி காணமுடிகிறது.

சிலரின் தலையில் கோடாரி போன்ற ஆயுதங்களால் வெட்டுவதை தாம் நேரிற் கண்டதாக தப்பிவந்தவர்கள் தெரிவிக்கின்றனர். 66ரு

### பஸ்...

பாக மேலும் இருவருக்கு ஏற்கனவே மரண தண்டனை புலிகளால் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

கனகராயன் குளத்திற்கும் புளியங் குளத்திற்கும் இடையில் இந்த பஸ் வந்தபோது பஸ் நடத்துனரைக் கொலை செய்து பயணிகளிடமிருந்து ரொக்கப்பணமும், நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன. (35பலரு)

### மன்னார்...

வரத்து இல்லாததாலேயே யானைகள் வீதிகளுக்கு வரத் தொடங்கியுள்ளன.

சில தினங்களுக்கு முன்னால் ஒருவர் யானையால் தாக்கப்பட்டு உயிரிழந்ததும் குறிப்பிடத்தக்கது. (66-ரு)

### செஞ்சிலுவைப்...

இன்று வழங்குவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்ததானம் செய்ய விரும்பும் தொண்டர் ஸ்தாபனங்களோ அல்லது சனசமூக நிலையங்களோ மானிப்பாய் செஞ்சிலுவைக் சங்கப் பிரிவுடன் தொடர்புகொண்டால் வாகன வசதி செய்து கொடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ப 11 ரு

### இரண்டாம்...

மகளிர் கல்லூரி, பி. சபாரத்தினம் மண்டைதீவு, ம. வி. மண்டைதீவு, ஆர். மெய்யலிங்கம் நுணாவில் மேற்கு அ. த. க. பாடசாலை சாவகச்சேரி, எஸ். கணேசதாசன் நெடுந்தீவு ம. வி. நெடுந்தீவு மத்தி. (70-கி)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 18-10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.